# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035
தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் - 13.05.2026**

**முன்னிலை**

## திரு அபய் குமார் சிங், இகாப (ஓய்வு)
## மாநில தகவல் ஆணையர்

*****

**வழக்கு எண். CP 744/F/2024**

திரு.P.கல்யாணசுந்தரம் .. புகார்தாரர்

/எதிர்/

பொதுதகவல் அலுவலர்/
அரசு சார்புச் செயலாளர்,
வீட்டுவசதி மற்றும் நகர்புற மேம்பாட்டுத்துறை, .. பொது அதிகார அமைப்பு
தலைமைச்செயலகம்,
சென்னை-9.

**ஆணை**

இவ்வாணையத்தில் இன்று 13.05.2026 நடைபெற்ற விசாரணைக்கு மனுதாரர் திரு.P.கல்யாணசுந்தரம் அவர்கள் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக, பொதுத்தகவல் அலுவலர் திருமதி.சு.சத்யா, பிரிவு அலுவலர், வீட்டுவசதி மற்றும் நகர்புற மேம்பாட்டுத்துறை, தலைமைச்செயலகம், சென்னை அவர்கள் ஆஜரானார். இதனை ஆணையம் பதிவு செய்கிறது.

2. மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன் கீழ், 12/09/2023 தேதியிட்டு தாக்கல் செய்துள்ள மனுவில் அமெரிக்கா தொழில்நுட்ப நிறுவனமான காக்னிசன்ட் டெக்னாலஜி சொல்யூசன் நிறுவனம் (CTS) கட்டிடம் சம்பந்தமாக L&T நிறுவனம் கட்டியதில் 12 கோடி லஞ்சம் பெறப்பட்டது சம்பந்தமாகவும் அதன் மீது லஞ்சம் ஊழல் ஒப்பந்தம் செய்துகொண்ட இது சம்பந்தமாக 9 பேர் மீது லஞ்ச ஒழிப்பு துறையின் மூலம் விசாரணை மேற்கொண்டு CMDA அதிகாரிகள் இந்நிறுவனத்தின் 1.மணிகண்டன் 2.நிர்வாகி ஸ்ரீதர் திருவேங்கடம், 3.ரமேஷ், 4.கண்ணன் 5.சதீஷ்,

6.சுப்ரமணி மற்றும் சிலர் மீது ஊழல் வழக்கு மிக சாமர்த்தியமாக மறைக்கப்பட்ட CMDA அதிகாரிகள் பெயர் சம்பந்தமான தகவல் இது சம்பந்தமாக நீதிமன்றம் அரசு துறை எடுத்த நடவடிக்கை சம்பந்தமாக தகவல்களைக் கோரியுள்ளார்.

3. அம்மனுவைப்பெற்ற பொதுத்தகவல் அலுவலர் 12.10.2023 நாளிட்ட கடிதம் மூலம் தகவல் வழங்கியுள்ளார். மனுதாரர் தனக்கு சரியான தகவல் வழங்கவில்லை என தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 19(1)ன் கீழ் 16.10.2023 நாளிட்ட முதல் மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டு அலுவலருக்கு தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீட்டு அலுவலர் 20.10.2023 நாளிட்ட கடிதம் மூலம் தகவல் வழங்கியுள்ளார். இந்நிலையில் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 18(1)ன் கீழ் 05.02.2024 நாளிட்ட புகார் மனுவினை ஆணையத்திற்கு தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் தாக்கல் செய்துள்ள அப்புகார் மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (13.05.2026) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

4. இன்றைய நேரடி விசாரணைக்கு ஆஜரான பொதுதகவல் அலுவலர் மனுதாரர் 6(1) மனுவில் கோரிய இனங்கள் குறித்து 12.10.2023 மற்றும் 27.11.2023 தேதியிட்ட கடிதங்கள் மூலம் தகவல்கள் வழங்கப்பட்டிருப்பதாக கூறி அதற்கான ஆவணங்களை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். இன்றைய விசாரணையில் மனுதாரர் சரியான தகவலை பெற்றுத்தருமாறு கோரினார்.

5. இன்றைய விசாரணையில் ஆணையத்தின் முன் உள்ள ஆவணங்களை பரிசீலனை செய்கையில் மனுதாரர் 6(1) மனுவில் கோரிய தகவல்கள் மனுதாரருக்கு 12.10.2023 மற்றும் 27.11.2023 நாளிட்ட கடிதங்கள் மூலம் தகவல் வழங்கப்பட்டிருப்பதை உறுதி செய்து இப்புகார் மனுவினை முற்றாக்கம் செய்து இவ்வாணையம் உத்தரவிடுகிறது.

**ஓம்/-(அபய் குமார் சிங்)**
**மாநில தகவல் ஆணையர்**

(ஆணையத்தின் ஆணைப்படி)

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். CP 744/F/2024</u>**

பெறுநர்

**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**

பொதுதகவல் அலுவலர்/
அரசு சார்புச் செயலாளர்,
வீட்டுவசதி மற்றும் நகர்புற மேம்பாட்டுத்துறை,
தலைமைச்செயலகம்,
சென்னை-9.

**<u>புகார்தாரர்:-</u>**

திரு.கல்யாணசுந்தரம்,
எண்.12, சி.எம்.வில்லேஜ்,
கோவிந்தன் தெரு,
சென்னை-600012.

Copy to file: KR/PA